2/6/1/DS-2012 GE

2012.09

அமைச்சுச் செயலாளர்கள்/

மாகாண சபை பிரதம செயலாளர்கள்/

திணைக்களத் தலைவர்கள்/

மாவட்ட செயலாளர்கள்/

பிரதேச செயலாளர்கள்/

அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும்
நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள் அனைவருக்கும்,

**"தயட்ட செவன" தேசிய மர நடுகை நிகழ்ச்சித் திட்டம்**
**2012 நவெம்பர் மாதம் 15**

அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பிறந்த தினத்தையும் இரண்டாவது பதவியேற்பையும் நினைவுகூரும் முகமாக 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட "தயட்டசெவன" மர நடுகை நிகழ்ச்சித் திட்டத்தை வருடாந்தம் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென 2011.09.14 ஆம் திகதி கூடிய அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இதற்கிணங்க மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தை அரசதுறை, தனியார்துறை மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் பங்களிப்போடு இவ்வாண்டிலும் நவெம்பர் மாதம் 15 ஆம் திகதி நடத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

02. "தயட்ட செவன" தேசிய மர நடுகை நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் நிறைவேற்றிக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற குறிக்கோள்களில், நிலக் கீழ் நீர் மட்டத்தை அதிகரிக்கச் செய்தல், அதன் மூலம் கமத்தொழிலுக்குத் தேவையான நீர் வழங்கல் செயற்பாட்டைப் பலப்படுத்தல், மண்ணரிப்பைத் தடுத்து மண்ணை பாதுகாத்தல், தேசிய மின்வலு முறைமைக்கு நீர் மின்வலுவின் மூலம் கிடைக்கின்ற பங்களிப்பை அதிகரிக்கச் செய்தல், மரத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளல், மண்ணின் செழிப்புத் தன்மையை அதிகரிக்கச் செய்தல், வளி மண்டலத்தின் தரத்தை அதிகரிக்கச் செய்தல் ஆகியவற்றை பிரதானமாக அறிமுகப்படுத்த இயலுமாயுள்ளது.

03. அதேபோன்று இலங்கையின் உயிர் வளங்கள் மற்றும் உயிர் பல்வகைத்தன்மையை பாதுகாக்கும் பொருட்டும் காலநிலை மாற்றங்கள், மண் அரிப்பு மற்றும் வரட்சி ஆகிய உலகளாவிய சுற்றாடல் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டும் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் கிடைக்கின்ற பங்களிப்பு அளப்பரியதாகும். இதற்கிணங்க தயட்ட செவன தேசிய மர நடுகை நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக மஹிந்த

சிந்தனை தொலைநோக்கு அபிவிருத்திக் கொள்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பசுமை நிறைந்த நாடொன்றை உருவாக்குவதற்கும் வாய்ப்புக் கிடைக்கு

04. இவ்வாண்டில் "தயட்ட செவன" தேசிய மர நடுகை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மர நடுகையின் பொருட்டு அலுவலக வளவுகள், பொது இடங்கள், பெருந் தெருக்களின் இரு மருங்குகள், குளக் கரைகள், மண் அரிப்புக்கு உள்ளான காணிகள், கால்வாய்கள், சிற்றாறுகள், ஆறுகள் ஆகியவற்றின் இரு மருங்குகளிலுமுள்ள சரிவுடன் கூடிய காணிகள், அதேபோன்று வனப் பயிர்ச் செய்கைகளற்றதும் மர நடுகைக்குப் பொருத்தமானதுமான ஏனைய அனைத்து நிலப் பரப்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்துதல் பொருத்தமாகும். இதற்கு மேலதிகமாக மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்திரமாக சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வூட்டும் செயலமர்வுகள், மண் பாதுகாப்புக் கருத்திட்டங்கள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புடன் தொடர்புடைய பல்வேறான பணிகள் மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய மட்டத்தில் ஒழுங்கு செய்யப்படுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

05. சுற்றாடல் அபிவிருத்தி தொடர்பாக எதிர்கால சந்ததியினரின் மனப்பாங்குகளை விருத்தி செய்கின்ற நோக்கத்துடன் அனைத்து பாடசாலை மாணவ சமுதாயத்தினரினதும் தீவிர பங்களிப்பை இந்நிகழ்ச்சித் திட்டத்திற்குப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

06. இதற்கிணங்க 02வது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை உங்களது நிறுவனங்களில்/ஆளுகைப் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அறிவுரைகளை வழங்குமாறு தயவுடன் வேண்டிக்கொள்கிறேன். அதேபோன்று உங்களது நிறுவனத்தினால் இவ்வாண்டில் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைத்துக்கொண்டு எதிர்வரும் நவெம்பர் மாதம் 15 ஆம் திகதி குறித்த கருத்திட்டங்களையும் செயற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு மேலும் வேண்டிக்கொள்கிறேன். எவ்வாறாயினும் மர நடுகை நிகழ்ச்சித் திட்டத்திற்கு வன பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் வழங்கக் கூடியதாயுள்ள கன்றுகளின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளதால் முடியுமானளவு கன்றுகளைக் களத்திலிருந்து பெற்றுக்கொள்ளுமாறும், மர நடுகை அனைத்து பிரசைகளினதும் பொறுப்பாகும் என்பதால் இதன் பொருட்டு தன்னார்வத்துடன் முன்வருமாறு அறிவுரை வழங்குதல் பொருத்தமாகும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

07. "தயட்ட செவன" தேசிய மர நடுகை நிகழ்ச்சித் திட்டம் நிலைபேறான அபிவிருத்திக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளதால் இதன் கீழ் நடப்படுகின்ற ஒவ்வொரு மரத்தையும் பேணிப் பாதுகாத்தல், பராமரித்தல் மற்றும் அறிக்கைகளைப் பேணிவருதல் அத்தியாவசியமாகும். இதன் மூலம் 02வது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் கிடைக்கின்ற பங்களிப்பை கால அடிப்படையில் மதிப்பிட முடியுமாயிருக்கும்.

இதற்கிணங்க, இப் பணியில் ஈடுபடுகின்ற நிறுவனங்கள் தத்தமது நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்த்துக்கொண்டுள்ள கால அட்டவணையின் ஊடாக பின்ஆய்வுச் செயற்பாட்டினை மேற்கொள்ளுதல் பொருத்தமாயிருக்குமென முன்மொழிகிறேன்.

08. "தயட்ட செவன" தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்தை தேசிய மட்டத்தில் இணைப்பாக்கம் செய்யும் பொருட்டு இவ்வமைச்சின் கீழ் "தயட்ட செவன செயலகம்" எனும் பெயரில் தனியானதொரு பிரிவு தாபிக்கப்பட்டுள்ளதோடு, அதன் தொலைபேசி இலக்கங்கள் பின்வருமாறு:

தொலைபேசி இலக்கம்:- +94-11-2878806/28772287/2868072/2877290

தொலைநகல் இலக்கம்:- +94-11-2877292/2868072

மின் அஞ்சல் (ஈ-மேல்):- dayatasevana@gmail.com/sugath2@gmail.com

இதைத் தவிர, நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றபோது தேவைப்படும் உதவி மற்றும் மதியுரைச் சேவைகள் அமைச்சின் பல்வேறு பிரிவுகளிலிருந்தும் மற்றும் நிறுவனங்களிலிருந்தும் வழங்கப்படும்.

09. இச் சுற்றறிக்கையானது, அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

**பி.எம்.யூ.டீ. பஸ்நாயக்க**
செயலாளர்
சுற்றாடல் அமைச்சு

**பிரதிகள்**

| | | |
|---|---|---|
| 1. | சனாதிபதியின் செயலாளர் | - தகவலின் பொருட்டு |
| 2. | பிரதம அமைச்சரின் செயலாளர் | - தகவலின் பொருட்டு |
| 3. | செயலாளர், அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு | - தேவையான அறிவுரைகளை வழங்கும் பொருட்டு |
| 4. | செயலாளர், கல்வி அமைச்சு | - தேவையான அறிவுரைகளை வழங்கும் பொருட்டு |
| 5. | காடு பேணலதிபர் | |
| 6. | தலைவர், மத்திய சுற்றாடல் அதிகார சபை | தேவையான உதவிகளை வழங்கும் பொருட்டு (6–11) |
| 7. | தலைவர், அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் | |
| 8. | தலைவர், புவிச் சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகம் | |
| 9. | தலைவர், தேசிய இரத்தினக் கற்கள், ஆபரணங்கள் அதிகார சபை | |
| 10. | தலைவர், கடல்சார் சுற்றாடல் அதிகார சபை | |
| 11. | தலைவர், இரத்தினக் கற்கள், ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் | |